**செய்தி வெளியீடு எண்:056** **நாள்: 25.01.2017**

**தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் (சிப்காட்)**

**2015–2016ம் ஆண்டிற்கான 60 சதவிகிதம் பங்குவிகிதம்**

**ரூபாய் 34.75 கோடி**

சிப்காட் நிறுவனம் தமிழகத்தில் பெரிய மற்றும் நடுத்தர தொழிற்சாலைகளுக்கு தேவையான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய தொழில் வளாகங்கள் / தொழிற்பூங்காக்கள் / தொழிற் மையங்களை உருவாக்கி, மாநிலத்தை தொழில்மயமாக்குவதில் முக்கிய பங்கேற்றி வருகிறது.

சிப்காட் நிறுவனம் 2015–2016ம் ஆண்டில் மிகவும் உயர்ந்த செயலாக்கத்தின் மூலம் ரூபாய் 454.31 கோடி மொத்த வருமானத்தையும் ரூவாய் 99.96 கோடி நிகர இலாபத்தையும் ஈட்டியுள்ளது.

சிப்காட் நிறுவனம் 2005–06 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து தமிழக அரசுக்கு ஆதாயப்பங்குத் தொகையினை வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

அதன் தொடர்ச்சியாக சிப்காட் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. இரா. வாசுகி இ,ஆ.ப. அவர்கள் 24.01,2017 அன்று அரசு தொழிற்துறை முதன்மைச்செயலாளர் திரு. விக்ரம் கபூர் இ.ஆ.ப. அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு தொழிற்துறை அமைச்சர் திரு. எம்.சி.சம்பத் அவர்களிடம் 2015.2016 நிதி ஆண்டிற்கான 60 சதவிகித ஆதாயப்பங்குத் தொகையான ரூபாய் 34.75 கோடியை வழங்கினார். இது கடந்த 11 ஆண்டுகளில் அதிகமான ஆதாயப்பங்குத் தொகையாகும்.

**வெளியீடு: – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**